# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,724/8 — 1966 දෙසැම්බර් 9 වැනි සිකුරාද — 1966.12.9

14,724/8 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### வர்த்தக வாகனப் பங்கீடு

1. (அ) தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்கள்.

(ஆ) கூட்டுறவு ஸ்தாபனங்கள் உட்பட, போக்கு வரத்து, இயந்திரக்கலை, பிற சேவைகள்.

என்பனவற்றில் வேலைக்குப் பாவிக்கப்படும் வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரிடமிருந்து, 10 வயதுக்கு மேற்பட்டும் (உதாரணமாக—1956 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதிக்கு முன் முதன்முதலாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டவை) 1956 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதிக்கு முன் அவர்களின் பெயரில் பதிவு செய்யப் பட்டும் விண்ணப்பம் செய்யும் திகதிவரை தொடர்ச்சியாக அவர்கள் வசம் இருக்கும் பழைய லொறிகளை அகற்றி அவற் றிற்குப்பதிலாக புதிய லொறிகள் கொள்வனவு செய்வதற்கு கீழே கொடுக்கப்பட்டது போல் தயாரிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற்கு எடுத் துக்கொள்ளப்படும்.

2. இவ் அறிவித்தலின் பிரகாரம் செய்யப்படும் விண்ணப் பங்கள் யாவும் இரட்டைப் பிரதிகளில், மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர், தொழில் நுட்பக்கிளை—பிரிவு 1, தபாற் பெட்டி 533, கொழும்பு, என்ற முகவரிக்கு 1967 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ம் திகதிக்கு முன்னதாக அல்லது அத் திகதியிற் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப் புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேற் கோணத்தில் "வர்த்தக வாகனப் பங்கீடு" எனக் குறித் திருக்க வேண்டும். எவ்வகையிலும் இவ் அறிவித்தலுக்கு அமையப் பெறுததும், காலதாமதமாயும் கிடைக்கும் விண் ணப்பங்கள் எச்சந்தர்ப்ப நிலையிலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. விண்ணப்பகாரர்கள், அவர்களின் விண்ணப்பங்களுக்கு ஆதாரமாய் பதிவுப்புத்தகம், வியாபாரக்கணக்குப்புத்தகம் ஆகியனவற்றின் மூலப்பிரதிகளைக் காட்டுமாறு, தேவையா யின் வேண்டப்படுவர்.

4. இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்று ஒரு ரூபாய் முத்திரையின் மேல், சமா தான நீதிபதி ஒருவர் முகதாவில் உறுதிப்படுத்தவேண்டும்.

து. இராஜேந்திரா,
மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர்.

கொழும்பு,
7-12-1966.

### விண்ணப்பப்பத்திரம்

(இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்)

1. விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும் :————.

2. தொகுதி எழுத்து :————.
(கீழே உள்ள குறிப்பில் (அ)வைப் பார்க்கவும்.)

3. தற்போது வைத்திருக்கும் வாகனங்கள் எல்லாவற்றின் முழு விபரமும் அவற்றின் இலக்கங்கள் (பதிவு) உற்பத்தி, தோற்ற விபரம், வயது—ஆண்டு மாதத்தில், ஓடிய மைல் தூரம் முதலியன :————.

4. அப்புறப்படுத்த இருக்கும் வாகனம்/வாகனங்கள், அடையாள இலக்கம் (பதிவு) ஒவ்வொன்றின் இலக் கம், அதன் உற்பத்தி, தோற்ற விபரம், வயது— ஆண்டு மாதத்தில், ஓடிய மைல் தூரம், வாகனம்/ வாகனங்கள் முதன் முதலாக பதிவுசெய்யப்பட்ட திகதியும், அவற்றிற்கு 1965 ம், 1966 ம் ஆண்டுகளுக் காய லைசென்ஸ் பெற்றுக்கொள்ளப்பட்டதா ? அப்படி யாயின் எவரால் லைசென்ஸ் கொடுக்கப்பட்டது, அவற் றின் இலக்கங்கள் :————.

5. தேவையான வாகனங்கள் ஒவ்வொன்றினது விபரம் : ————.

(அ) எவ்வகை வாகனம் தேவை :————.
(உதாரணமாக :—லொறி அல்லது பொதி ஏற் றிச் செல்லும் வான் அல்லது லாண்ட் ரேவர் அல்லது ஜீப் அல்லது மோட்டார் துவிச்சக்கர வண்டி).
(கீழே உள்ள குறிப்பின் (இ)யைப் பார்க்க வும்)

(ஆ) உற்பத்தி, வாகனத்தின் மொத்த எடை (தனி வாகனத்தின் எடையும் பொதியின் எடையும் சேர்ந்த எடை) :————.

(இ) உள்ளூர் விநியோக வியாபாரியின் பெயரும் முக வரியும் :————.

(ஈ) காப்புறுதியுடன் சுமைகூலி விலை :————.
(கீழே உள்ள குறிப்பில் (ஆ)வைப் பார்க்கவும்)

(உ) உற்பத்தி செய்த தேசம் :————.

6. தேவையானவற்றின் சுருக்கமான விபரம்.

(அ) தேவையான வாகனங்களின் தொகையும் அவற்றின் விபரங்களும் :————.

(ஆ) காப்புறுதியுடன் சுமைகூலியின் மொத்த விலை : ————.

(இ) எவ்வெவ் உற்பத்தி வாகனங்கள் கொள்வனவு செய்ய விருப்பம், விருப்பத்தை வரிசைக் கிரமத்தில் குறிப்பிடுக :————.

7. செய்யும் அலுவல் பற்றிய விபரங்கள் :

(அ) தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்களாயின் கீழ் வரும் விபரங் கொடுக்கவும் :

(1) தோட்டத்தின் பெயரும் பிரதான விளை பொருளும் :————.

(2) அமைந்துள்ள இடம் :————.

(3) விஸ்தீரணம் :————.

(4) தேயிலை, இறப்பர் தோட்டங்களாயின், தேயிலை-இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரியாலும், தென்னந் தோட்டங்களாயின் உரம் பெறுவதற்கு தெங்குப் பொருள் புனர் அமைப்புப் பகுதியால் வழங்கப்பட்ட பதிவு இலக்கமும் (இயலுமாயின்) உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் : ————.

(5) பயிர்ச் செய்கையில் உள்ள நிலப்பரப்பு : ————.

(6) வருடாந்த விளைச்சல் :————.

(7) இவை சார்பான மற்றும் விபரங்கள் : ————.

(ஆ) போக்கு வரத்து, இயந்திரக்கலை, பிற சேவைகளாயின் கீழ் வரும் விபரங்கள் கொடுக்கவும் :

(1) செய்யும் அலுவலின் தன்மை :————.

(2) வருடாந்த உற்பத்தியின் பெறுமதி—(1965) :————.

(3) நேரடியாக வேலையிலீடுபடுத்தப்பட்டிருக்கும் வேலையாட்களின் தொகை :————.

(4) இவை சார்பாக மற்றும் விபரங்கள் : ————.

முக்கிய கவனிப்பு : விளக்கக் குறிப்பு

(அ) கூடு 2 இல் தொகுதி " அ " அல்லது " ஆ " எனக் குறிப்பிடவும்.

தொகுதி " அ "—தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டம்.

தொகுதி " ஆ "—போக்கு வரத்து இயந்திரக் கலை, பிற சேவைகள்.

(ஆ) லொறி அல்லது பொதி ஏற்றிச் செல்லும் வானுக்கு காப்புறுதியுடன் சுமைகூலி விலை செசியோடு கூடிய எந்திரத்திற்கு மட்டுமே கணக்கிடவேண்டும்.

(இ) மோட்டார் துவிச்சக்கர வண்டிக்காய விண்ணப்பங்கள் தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்களாகியவற்றில் வேலை தொடர்பாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எவ்வகையிலும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன்.

எனது முகதாவில்.

————
சமாதான நீதிபதி.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்
ஒரு ரூபாய் முத்திரையில்.

திகதி :————.

12-688